நாமக்கல் மாவட்டக் கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்:திரு.ஆ.கார்த்திகேயன்.,M.C.A.,

---

செ.மு.ந.க.எண்.2223/2020/அ2 நாள்:17.05.2022

பொருள்: பணியமைப்பு - கருவூலம் மற்றும் கணக்குத்துறை - நாமக்கல் மாவட்டக் கருவூல அலகு - திருமதி.தே.ஜெயந்தி, என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2015-2016,2016-2017,2017-2018 -ஆம் ஆண்டு தொகுதி IV –இன் (CCSE-IV)மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு - நாமக்கல் மாவட்டக் கருவூல அலகில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1.முதன்மை செயலர்/ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை சென்னை அவர்களின் ந.க.எண்.7107/2019/சி3 நாள்:04.03.2019.
2.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-03 அவர்களின் கடித எண்.1149/PSD-H2/2019 நாள்:18.02.2019.
3.இவ்வலுவலக செ.மு.ந.க.எண்.1058/2019/அ2 நாள்:14.03.2019
4.உதவி இயக்குநர், அரசு தேர்வுகள் துறை இயக்குநர் அலுவலகம், நாமக்கல் அவர்களின் ந.க.000607/அ1/2019 நாள்:17.12.2020.
5.இவ்வலுவலக கடிதம் நக.எண்:2223/2020/அ2 நாள்:22.10.2020,04.03.2021
6.ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், சென்னை அவர்களின் ந.க.16138/CV-4(2)/2020-6, நாள்:28.04.2022.
7.அரசாணை (நிலை) எண்:191 பொதுத்துறை நாள்:01.02.1962

*********

பார்வை 1 மற்றும் 2-இல் காணும் ஆணையின்படி, திருமதி.தே.ஜெயந்தி என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2015-2016,2016-2017,2017-2018 -ஆம் ஆண்டு தொகுதி IV –இன் (CCSE-IV)மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப் பெற்று கருவூலம் மற்றும் கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளார்.

தனியர் பார்வை 3-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் படி 14.03.2019 முற்பகல் நாமக்கல் மாவட்ட கருவூல அலகு, சார்நிலை கருவூலம் கொல்லிமலை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4 இல் உள்ள கடித வழியே தனியரது பத்தாம் வகுப்பு மதிப்பெண் கல்வி சான்றிதழ் உண்மை தன்மை வாய்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 6 இல் உள்ள கடிதத்தின் வழியே தனியரின் சாதிச்சான்றின் மெய்தன்மை விவரம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

எனவே பார்வை 7 இல் உள்ள அரசாணையின் படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 14.03.2019 முற்பகல் முதல் தனியருக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

1. தனியர் பணியேற்ற நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிகாலத்தில் இரண்டாண்டு பணிகாலம் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

2. தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் அரசு விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதுடன் அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும்.

3. சென்னை உயர்நீதிமன்றம்/சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ஆகியவற்றில் பணிவரன்முறை மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2015-2016,2016-2017,2017-2018 ஆம் ஆண்டு தொகுதி IV–இன் (CCSE-IV) தெரிவு சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவின் படியும் பின் நாளில் அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு ஏற்ப இவ்வாணை மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

கருவூல அலுவலர்,
நாமக்கல்.

பெறுநர்
திருமதி. தே. ஜெயந்தி,
இளநிலை உதவியாளர், சார்நிலைக் கருவூலம், கொல்லிமலை(உரிய வழியாக)

17/05/2022

நகல்:
1. உதவி கருவூல அலுவலர், சார்நிலைக் கருவூலம், கொல்லிமலை. (தனியருக்கு சார்பு செய்யும் பொருட்டு)
2. இருப்பு கோப்பு அ1/அ2